நாள்- 22.08.2022

Case No. OS.154/2014

**DW.1- தியாகராஜன் – வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் மனைவி ஆற்காடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் வேதவதியம்மாள் இறந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபால் என் மாமனார் எப்போது காலமானார் என்றால் 1986 ல் காலமானார். என்னுடைய மாமியார் எப்போது காலமானார் என்றால் 1992 ல் காலமானார். என் மாமனார் வெங்நன்னரெட்டியார் இறப்பிற்கு பின்னிட்டு தாவா சொத்தில் ஸ்ரீதர் என்பவர்தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எனக்கும், என் மனைவிக்கும் எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 5.2.1985 ல் திருமணம் நடைபெற்றது. வேதவதியம்மாளுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் எனக்கு தெரியாது, ஆனால் என் திருமணத்திற்கு முன்பாகவே அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. திருமணம் ஆனவுடன் வேதாவதி சென்னையில் சென்று அங்குதான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, புங்கனூரில்தான் குடியிருந்து வருகிறார். என் மாமனார் வெங்நண்ணரெட்டியார் இறந்த உடனே அவருடைய சொத்தில் இருந்து பாகப்பிரிவினை கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் வாதி பானுமதி தாவா சொத்தை வாங்கியபிறகு 2 ஆண்டுகள் கழித்துதான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாதி தாவா சொத்தில் கடக்கால் போட்டப்பிறகுதான் எனக்கு தெரியவந்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வாதி பானுமதி தாவா சொத்தை வாங்கிய விவரம் எனக்கு நன்கு தெரியும், நான் தாவா சொத்தின் அருகில்தான் குடியிருந்து வருகிறேன் என்பதால் வாதி பானுமதி தாவா சொத்தை வாங்கிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஸ்ரீதருக்காக ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், அதில் அவர்தான் சுவாதீனாம்த்தில் இருந்துவந்தார் என்றும், அதன் அடிப்படையில் அவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இதுநாள்வரையில் மேற்படி பட்டாவில் என் மனைவியின் பெயரை சேர்ப்பதற்கு மனு எதுவும் நான் கொடுக்கவில்லை இல்லை

என்றால் சரிதான். உண்மையிலேயே நான் முதல் விசாரணையில் கூறியவாறு என் மனைவிக்கு தாவா சொத்தில் உரிமை இருந்திருந்தால் நான் உடனடியாக என் மாமனார் காலமானபிறகே மனு செய்திருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாத காரணத்தினால்தான் நான் இதுநாள் வரை பட்டாவில் என் மனைவியின் பெயரை சேர்க்க மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தாவா சொத்தில் வாதி பானுமதிதான் வீடு கட்டி அதில் தற்போது வரை சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகின்றார் என்றால் சரிதான். ஸ்ரீதர் விற்பனை செய்த சொத்தானது செல்லாது என்று வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் மனைவி தாக்கல் செய்வதாக சொல்லப்படும் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், இன்றைய தேதிவரை வாதிதான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, எனவே வாதி தாவாவில் கூறியுள்ளவாறு தாவாபடி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.